மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.171/2022</u>

2026ம் ஆண்டு மார்ச் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலையரசி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.03.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான்தான் இறந்து போன பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன் நான் எனது வழக்குரையிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும், எனக்கும் பழனிச்சாமிக்கும் சிவன்மலையில் திருமணம் நடந்ததாக சொல்லி உள்ளேன் ஆனால் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. பழனிச்சாமி கவுண்டரின் பெற்றோர்கள் இறந்து விட்டார்கள் என்பதை பொறுத்து நான் மேற்படியார்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், பழனிசாமி கவுண்டர் என்பவரும் ஒன்றாக கணவன் மனைவியாக வசித்து வந்தோம் என்று நான் சொல்லி உள்ளதை

பொறுத்து நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி கவுண்டருக்கு சரஸ்வதி தான் இரண்டாம் மனைவி என்று நான் சொல்லி உள்ளதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரஸ்வதியை என் கணவர் எப்போது திருமணம் செய்தார் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது.

3. என்னை திருமணம் ஆகாதவர் என்று சொல்லி தான் பழனிச்சாமி திருமணம் செய்தார் அவருக்கும், சரஸ்வதிக்கும் திருமணம் ஆன விபரங்கள் குறித்து எனக்கு என் திருமண சமயத்தில் எதுவும் தெரியாது நான் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யாததால் தான் இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் எனக்கு வாரிசு சான்றிதழ் வழங்க இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் முறையான ஆவணங்களை தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் இறந்த தேதி 09.01.2018. எனக்கு சுமார் 50 வயது தற்போது இருக்கும் என் கணவர் இறந்த சமயத்தில் எனக்கு சுமார் 40, 42 வயது இருக்குமா என்றால் இருக்கலாம். என் மகன்கள் இருவரும் எனக்கு இரட்டை குழந்தைகள் என்றால் சரிதான். என் கணவர் இறந்த சமயத்தில் என் மகன்கள் என்ன படித்துக் கொண்டிருந்தார்கள்

என்றால் ஞாபகம் இல்லை. தற்போது என் மகன்களுக்கு 25 வயது ஆகிறது. என் கணவர் இறந்த சமயத்தில் என் மகன்களுக்கு 16, 17 வயது இருக்குமா என்றால் இருக்கும். என் கணவர் இறந்த சமயத்தில் 3ம் எதிர்மனுதாரர் சரஸ்வதிக்கு சுமார் 52 வயது இருக்குமா என்றால் அது எனக்கு தெரியாது.

2. 4ம் பிரதிவாதிக்கு பழனிச்சாமி இறந்த சமயத்தில் சுமார் 32 வயது இருக்குமா என்றால் அது எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி என்னைவிட வயதில் மூத்தவரா என்றால் அது எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி எனது இரண்டு மகன்களின் வயதை விட மூத்தவர் என்றால் சரிதான். வயதின் அடிப்படையில் பார்த்தால் மூன்றாம் பிரதிவாதி தான் இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு முதல் மனைவி என்றால் இல்லை நான் தான் முதல் மனைவி. இறந்து போன பழனிச்சாமிக்கு 3, 4 பிரதிவாதிகள் மட்டும்தான் வாரிசாக வருவார்கள் என்றால் இல்லை நானும் என் மகன்களும் மட்டும் தான் வாரிசுகள் என் கணவர் இறந்து நான்கு வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

3. எனது சொந்த ஊர் வெள்ளகோவில் சிலம்பகவுண்டன் வலசு. இறந்துபோன பழனிச்சாமியின் சொந்த ஊர் பரஞ்சேர்வழி மாரணம் பாளையம். மாரணம் பாளையம் முகவரியில் நான் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். எனது ஆதார் அட்டையில் என்ன முகவரி உள்ளது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் எனது ஆதார் அட்டையான வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன முகவரி சொல்லப்பட்டுள்ளது என்றால் சிலம்பகவுண்டன் வலசு முகவரி அதில் கண்டுள்ளது. அது எனது தகப்பனாரின் முகவரி என்றால் ஆமாம் எனது

ஆதார் அட்டையில் எனது கணவர் பெயர் குறிப்பிடப்படவில்லை எனது தகப்பனார் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும், பழனிச்சாமிக்கும் திருமணம் நடந்தது என்பது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது திருமண பத்திரிகையை தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் சொல்வது உண்மை அல்ல என்றும் அதுபோன்ற ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல நான் இந்த வழக்கில் எனக்கும் பழனிச்சாமிக்கும் திருமணமானது குறித்து திருமண புகைப்படங்கள் மற்றும் மண்டப ரசீதுகள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எனக்கும், பழனிசாமி என்பவருக்கும் திருமணம் நடந்தது என்பது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. எங்கள் திருமணத்தை நாங்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோமா என்றால் பதிவு செய்துள்ளோம். ஏன் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை நான் உண்மையிலேயே பழனிச்சாமியை திருமணம் செய்து இருந்தால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும், எங்களுக்குள் திருமணம் எதுவும் நடக்கவில்லை என்றும் அதனால் தான் என்னால் அது குறித்து ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. உண்மையிலேயே எனக்கும், பழனிசாமிக்கும் திருமணம் நடந்திருந்தால் அரசால் எங்களுக்கு குடும்ப அட்டை

வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அதில் குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் குடும்ப அட்டையை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் தாக்கல் செய்திருப்பேன் என்று நினைக்கிறேன். பழனிச்சாமி எனது கணவர் என்பதை காட்டக் கூடிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பழனிச்சாமியின் பெற்றோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது மாமனார் பெயர் அங்கப்பகவுண்டர். எனது மாமியார் பெயர் ராமாத்தாள். எனது வழக்குறையில் 3ம் பிரதிவாதியின் வயது 60 என்றும், 4ம் பிரதிவாதியின் வயது 35 என்றும் சொல்லி உள்ளேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இறந்து போன பழனிச்சாமி கவுண்டருக்கு எவ்வளவு ஏக்கர் நிலங்கள் உள்ளது என்றால் மாரணம் பாளையத்தில் மூன்று ஏக்கர் நிலங்கள் உள்ளது. நான் பழனிச்சாமியை திருமணம் செய்யவில்லை என்றும் அவரோடு சேர்ந்து வாழவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு 3ம் பிரதிவாதி தான் முதல் மனைவி என்றும், நாலாம் பிரதிவாதி தான் முதல் மனைவி மூலமாக பிறந்த முதல் மகன் என்றும் சொன்னால் சரியல்ல.

8. எனது திருமண தேதி 08.03.1996. திருமணமாகி ஐந்து ஆண்டுகள் கழித்து தான் என் மகன்கள் பிறந்தார்கள். நான் என் கணவரின் சொத்துக்களை அடைய வேண்டி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே பழனிச்சாமி என்பவருக்கு நாங்கள் தான் வாரிசுகள் என்றால் அது

சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் நாங்கள் தகவல் செய்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

9. எனது மகனின் இரண்டு பிறப்புசான்றிதழ்களிலும் சேனாபதிபாளையம் முகவரிதான் உள்ளது என்றால் சரிதான். நான் என் அம்மா வீட்டில் அப்போது இருந்ததால் அந்த முகவரியை கொடுத்தோம் என் கணவர் வர போக தான் இருந்தார். எனக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் திருமணம் நடக்கவில்லை என்றும் நாங்கள் இருவரும் ஒன்றாக வாழவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள இருப்பிட சான்றிதழ் வழக்கிற்கு பின்னிட்டு என்னால் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

10. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களிலும் என் கணவரின் முகவரி குறிப்பிடப்படாமல் சிலம்ப கவுண்டர் வலசு முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்ன காரணம் என்றால் நான் 25 ஆண்டுகளாக என் பெற்றோர்கள் வீட்டில் தான் இருந்து வருகிறேன் என் கணவர் வரப்போக இருந்து வந்தார். நான் திருமணம் ஆனதிலிருந்து தற்போது வரை என் அம்மா வீட்டில் தான் இருக்கிறேன் என்றால் ஆமாம். நான் மாரணம் பாளையத்தில் நிறையாக தங்கவில்லை என்றால் ஒரு வாரம், பத்து நாள் அங்கு இருப்பேன் போய் வந்து கொண்டு தான் இருந்தேன். எனது மகன்களின் ஆதார் அட்டையிலும் சிலம்பகவுண்டன்வலசு முகவரிதான் உள்ளது என்றால் ஆமாம்.

11. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணத்திலும் சிலம்பகவுண்டர்வலசு முகவரி தான் கண்டுள்ளது என்றால் ஆமாம். எனக்கும், இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கும் திருமணம்

நடந்தது என்பதை காட்டுவதற்கோ மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு நானும், 2, 3 வாதிகள் மட்டும் தான் வாரிசுகள் என்பதை காட்டுவதற்கோ எங்கள் தரப்பில் நாங்கள் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.05 19:10:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்